# சாங்கிய தத்துவத்தில் காரண காரிய வாதம்

**Thiruchchelvam Kishanthiny**
Lecturer, Department of Hindu Civilization, University of Jaffna
kishanthiny.t@gmail.com

இந்திய மெய்யியலின் எல்லாக் கிளைகளிலுமே காரண காரியத் தொடர்பு ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. மெய்யியலாளர்கள் காரணத்துவத்தை ஆய்வுகளுக்கான ஒரு பிரதான தலையங்கமாக ஏற்றுக் கொள்கிறார்கள். இந்திய மெய்யியல் முறைமை ஒவ்வொன்றினதும் யதார்த்தம் பற்றிய கருத்தியல், காரண காரியத் தொடர்பு கோட்பாட்டிலேயே தங்கியுள்ளது. காரணக்கொள்கை தொடர்பான மெய்யியலாய்வுகளில் எழுகின்ற அடிப்படையான மூலப்பிரச்சினைகளில் காரியம் காரணத்தில் ஏலவே உள்ளுறைந்துள்ளதா என்ற பிரச்சினையே முதன்மையானது. இந்து மெய்யியல் முறைமைகளிடையே காரண காரியத் தொடர்புகள் சம்பந்தப்பட்ட மூன்று பிரதான கோட்பாடுகள் நிலவுகின்றன. அவையாவன சுபாவ வாதம், சத்காரியவாதம், அசத்காரியவாதம் என்பனவாகும். சத்காரியவாதம் பரிணாமவாதம், விவர்த்தவாதம் எனவும் அசத்காரியவாதம் ஆரம்பவாதம், பரதீத்யசமுத்பாத வாதம் எனவும் இருவகைப்படுகின்றன. இக்கோட்பாடுகளுள் சாங்கிய தத்துவம் சத்காரியவாதத்தை ஏற்றுக் கொள்கிறது. காரியமென்பது காரணத்தில் உள்ளடங்காத புதியதொன்றல்ல. சடமாகிய காரணத்தில் ஏலவே உள்ளடங்கி இருந்ததே காரியமாக வெளிப்படுகிறது என்பது சாங்கியரின் துணிபு. இதனடிப்படையில் இந்திய மெய்யியல் வளர்ச்சிக்கு காரண காரிய நிலைப்பாடு எத்தகைய முக்கியத்துவம் உடையது என்பதற்கு, சாங்கிய தத்துவத்தின் சத்காரியவாதம் பற்றி வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகிறது. இக்கட்டுரையானது அடிப்படையில் விபரண ஆய்வு முறையியலுக்கு அமைவாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் தகவல்கள் உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையியலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** *சாங்கியம், புருடன், பிரகிருதி, தத்துவம், சத்காரியவாதம், பரிணாமவாதம், காரண காரியத் தொடர்பு*